திரு. எம். எத்திராஜுலு: கடலூர் கூட்டுறவு எக்ஸ்-சர்விஸ்மென் சங்கத்தில் இருந்து 20 கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்படவேண்டுமென்றும், அதில் வேலை செய்த அதிகாரிகள் மூன்று பேரை நீக்கியது சரியல்ல என்றும், அவர்களை மீண்டும் வைக்கவேண்டுமென்றும், அப்படி வைக்கத் தவறினால் 1—2—1969-ல் வேலைநிறுத்தம் செய்யமுடியும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். பின்னர் வேலூரிலிருந்து லேபர் ஆபீசர் வந்து சமாதானப்படுத்தி விட்டு சென்றிருக்கிறார். அப்போது 22—2—1969-க்குள் மீண்டும் அவர்கள் வேலையில் சேர்க்கப்படாவிட்டால் திரும்பவும் வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப் போவதாக சொல்லப்படுகிறதே, அது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: கூட்டுறவு மூலமாகக் கொடுக்கப்படும் தொகை திரும்ப வசூலிக்கப்படுகிறதா என்பது மூலக் கேள்வி. இங்கு அங்கத்தினர் கேட்கும் தகவல் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் சொல்லமுடியும்.

MR. CHAIRMAN: Questions are over.

Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.)

II.—ANNOUNCEMENTS.

(1) BUSINESS OF THE HOUSE.

MR. CHAIRMAN: In partial modification of the programme already announced, the Legislative Council will sit on Friday, the 28th February 1969 instead of on the 27th February 1969 and 27th February will be a holiday for Bakrid.

(2) MESSAGE FROM THE ASSEMBLY.

MR. CHAIRMAN: I have received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1969 (L.A. Bill No. 3 of 1969) as passed by the Legislative Assembly and signed by him for the concurrence of the Council.

III—CALLING ATTENTION TO DELAY IN GIVING SERVICE CONNECTIONS TO PUMPSETS FOR IRRIGATION PURPOSES IN RAMANATHAPURAM DISTRICT.

திரு. வி. தங்கபாண்டியன்: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதாவது,

"பாசன காரியங்களுக்காக விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதில் தாமதம் ஏற்படுவதனால் இராமநாதபுரம் மாவட்டத்தில் உணவு உற்பத்தி பாதிக்கப்படுதல்" என்பது.